# நம் வாழ்வை மாற்றி அமைத்து வரும் தகவல்தொடர்புச் சாதனங்கள்

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வேகமாக மாறி வரும் இவ்வுலகம் விஞ்ஞான முன்னேற்றங்களைக் காண்கிறது. மேலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் தோன்றுகின்றன. இவ்வாறு விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் விரிந்து வரும் உலகை ஒருங்கிணைப்பது தகவல் தொடர்புச் சாதனங்களேயாகும். இவ்வாறு மனித வாழ்க்கையில் ஆதிக்கம் பெற்ற தகவல் தொடர்பு சாதனங்கள் நமது மாணவர்களுடைய வாழ்க்கையிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

தகவல் தொடர்பு சாதனங்களாக கணினி, வானொலி, தொலைக்காட்சி, கைதொலைபேசி போன்றவற்றைச் சில உதாரணங்களாக எடுத்துக் கூறலாம். இது போன்ற சாதனங்கள் இன்றைய மாணவர்களின் வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உதாரணத்திற்கு, இன்றைய மாணவர்களிடம் அதிக பிரபலம் அடைந்துவரும் ஒரு தகவல் தொடர்பு சாதனம் எது என்று கேட்டால், அது கைதொலைபேசியே ஆகும். எங்குத் திரும்பினாலும் தொலைபேசியும் கையுமாகத்தான் மாணவர்கள் காட்சியளிக்கின்றனர். அது மட்டுமல்லாமல், கையடக்கத் தொலைபேசிகளின் வழியே குறிப்பிட்ட இணையப் பக்கங்களுக்கும் சென்று தேவையான தகவல்களைச் சேரித்துக் கொள்கின்றனர்.

அது மட்டுமில்லாமல், வானொலி, தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு சாதனங்களும் மாணவர்கள் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இன்றைய மாணவத் தலைமுறையினர், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றை அதிகம் பயன்படுத்துகிறார்கள். அவற்றின் மூலம் சுற்றுப் புறத்திலும் உலகில் நடப்பவை பற்றியும் அறிய ஆவல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் கணினிகளையும் அதிகம் நம்பியுள்ளனர். மாணவர்களுக்கு வேண்டிய பல தகவல்களை இணையத்தளங்கள் நல்குகின்றன. மேலும் இணைய வசதியின் மூலம் மாணவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் உரையாடுகின்றனர்; மின்னஞ்சல்களும் அனுப்புகின்றனர்.

இவ்வாறு மிகப் பெரிய அளவில் தகவல் தொடர்புச் சாதனங்கள் மாணவர்கள் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துவதற்குச் சில காரணங்கள் உண்டு. இவ்வாதிக்கத்திற்கு முதல் காரணம், தகவல் தொடர்புச் சாதனங்கள் அழிவில்லாச் செல்வமான கல்விக்கு உதவுகின்றன. அவை இன்றைய நவீன உலகில், வாழ்க்கையின் பெரும்பாலான பகுதிகளை விட்டு வைக்கவில்லை. இன்றைய மாணவர்கள் தங்களது பாடங்களுக்காகவும் ஒப்படைப்புகளுக்காகவும் தகவல் சேகரிக்க, தகவல் தொடர்பு சாதனங்களை நாட வேண்டியுள்ளது. உதாரணத்திற்கு இணையத்தளங்களில் தகவல்கள் நாடி, கணினியின் உதவியோடு பாடங்களைச் செய்கின்றனர்.

பொழுதுபோக்கிற்கும் மாணவர்கள் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். மூன்றாவதாக, மாணவர்கள் தங்களுடைய சுய வளர்ச்சிக்காகவும் தகவல் தொடர்புச் சாதனங்களை நாடுகிறார்கள். தொலைக்காட்சிப் பார்க்கும் மாணவர்கள்

அவ்வப்போதுள்ள உலக நடப்புகளை அறிகின்றனர். இதன் மூலம் அவர்களின் பொது அறிவு வளர்கிறது. தாங்கள் வாழ்வில் முன்னேறுவதற்குப் பயன் தரக்கூடிய பல்வேறு தகவல்களைப் பெறுவதற்கும் மாணவர்கள் தகவல் தொடர்புச் சாதனங்களை நாடுகின்றார்கள்.

இறுதியாக, காலத்திற்கு ஏற்ப மாறவும் மாணவர்கள் அதிகமாக தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு, அறிவை வளர்த்துக் கொள்ளாமல், காலத்திற்கு ஏற்ப மாறாவிட்டால், பின் தங்கிவிடுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஆகவே, முன்னேற்றத்தின் அடையாளமாகத் தகவல் தொடர்பு சாதனங்கள் விளங்குகின்றன.

மேற்கூறிய காரணங்களாலேயே தகவல் தொடர்பு சாதனங்கள் மாணவர்கள் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று கூறுவது மிகையாகாது. மேலும், காலத்திற்கு ஏற்ப மாறி, அறிவுள்ள மக்களாகத் திகழ்வது முக்கியம் என்பதற்கு இன்றைய மாணவர்களே நல்ல உதாரணம்.

**நஸ்ரின் நசீர்**
**உயர்நிலை 4 உயர்தமிழ்**
**பாயலேபார் மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி**